மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.01/2021
உள்
அசல் வழக்கு எண்.67/2015
-------------

முத்துகிருஷ்ணமநாயக்கர் (இறப்பு)
1. எம்.சங்கரசுப்புராஜ்
2. எஸ்.பாலகிருஷ்ணன் ... மனுதாரர்கள்/புரபோஸ்டு பார்ட்டி

/எதிர்/

1. ஏ.நாராயணன்
2. ஏ.ராமசாமி
3. என்.அய்யப்பன்
4. ஆர்.அய்யப்பன் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 15.09.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 14.10.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ எதிர்பார்ப்பு உத்தேச வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கே.பாலராம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.வி.ரவீந்திரன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 3-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், இறந்துபோன வாதிக்கு எதிர்பார்ப்பு உத்தேச வாதிகளை வாரிசாக சேர்க்க உத்தரவிடக்கோரி

*15.09.2021*ம் தேதி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>*2).* மனுதாரர்கள்/உத்தேச எதிர்பார்ப்பு வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

வாதி கடந்த *05.06.2021*ம் தேதி இறந்துவிட்டார் என்றும், வாதி உயிருடன் இருந்தபோது மனுதாரருக்கும், அவரது மகனுக்கும் ஆதரவாக வத்திராயிருப்பு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.*42/18*ன்படி ஒரு உயில் ஆவணம் பிறப்பித்துள்ளார் என்றும், அந்த உயில்படி தபசில் சொத்துக்களுக்கு மனுதாரர்கள் உரிமையாளர்கள் என்றும், அதனால் மனுதாரர்களை அசல் வழக்கில் வாதிகளாக சேர்க்க வேண்டுமென்றும் வாதியின் இறப்புக்கு பின்னிட்டு *05.06.2021*ம் தேதியிட்ட உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது. எனவே, மனுதாரர்களை இந்த வழக்கில் வாதிகளாக சேர்த்துக்கொண்டு உத்தரவிடுமாறு மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>*3). 1, 2* எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>**

வழக்கு சொத்து தொடர்பாக அசல் வழக்கு நிலுவையில் இருந்துவரும்போது வழக்கு சொத்தைப் பொறுத்து உயில் எழுதப்பட்டதாகவும், அதன்படி மனுதாரர்களுக்கு தபசில் சொத்து பாத்தியம் என்று கூறுவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. உயில் எவ்வித உரிமையையும் ஏற்படுத்தாது. மேலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் குறுந்தலைப்பில் சரியாக மனுதாரர்களை அடையாளப்படுத்தவில்லை. அதாவது மனுதாரர்கள் மனுவில் எத்தனையாவது மனுதாரர்கள் என்றும், இறந்துபோனதாக சொல்லப்படும் வாதி மனுவில் எத்தனையாவது மனுதாரர் என்று முறையாக சொல்லப்படவில்லை. அதனால் மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும் இல்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7). தீர்வு:-**

மனுதாரரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக வத்திராயிருப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.42/2018 ஆக பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தை தாக்கல் செய்து இறந்துபோன வாதி மனுதாரர்களுக்கு உயில் சாசனம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதை நிரூபணம் செய்துள்ளார்கள். எனவே, மனுதாரர்களால் இறந்துபோன வாதிக்கு எதிர்பார்ப்பு உத்தேச வாதிகளை வாரிசாக சேர்க்க உத்தரவிடக்கோரி 15.09.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரர்களால் தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். மேலும் இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்மந்தமான வேறு பல வழக்குகளும் எழுக்கூடும். எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து

உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இறந்துபோன வாதிக்கு எதிர்பார்ப்பு உத்தேச வாதிகளை வாரிசாக சேர்க்க உத்தரவிடக்கோரி 15.09.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/எதிர்பார்ப்பு உத்தேச வாதிகள் தரப்பு சாட்சிகள்:- இல்லை

**<u>மனுதாரர்கள்/எதிர்பார்ப்பு உத்தேச வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

ம.சா.ஆ.1 - 04.06.2018ம் தேதியிட்ட உயில் சாசனம் நகல்

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.